# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் 31.10.2023 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத்துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

| | |
|---|---|
| 1 | மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்கு செல்லும் பாதை சுற்றுலாத்தலத்திற்கு செல்லும் பாதை என்பதால் முக்கிய பிரமுகர்கள், சுற்றுலா பயணிகள் செல்கின்றார்கள். மேலும் 33 வார்டுகளில் செடிகள், புற்கள், வளர்ந்து அதனை பணியாளர்கள் கொண்டு சுத்தம் செய்ய பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளது. எனவே, சுகாதாரப்பிரிவிற்கு தலா ஒன்று வீதம் 4 (நான்கு) எண்ணிக்கை (சிறிய அளவு) புற்கள் வெட்டும் இயந்திரங்கள் வாங்க தோராய செலவினம் ரூ.1,00000 /- க்கு (ஒரு இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 4126/23/எச்1<br>தீர்மான எண்: 710<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் தற்போது வார்டு எண் 5-ல் தினசரி சந்தை (இறைச்சி மற்றும் மீன்) கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ.259.00 இலட்சம். 2) வார்டு 16-ல் தினசரி சந்தை கட்டிடம் ரூ.440.00 இலட்சம் 3) வார்டு எண் 3-ல் வாரசந்தை கட்டிடம் ரூ.129.00 இலட்சம் 4) நவீன பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு ரூ.863.00 இலட்சம் ஆகிய பணிகளுக்கு அரசு ஆணை GO (4D)No:39, நாள்: 14.09.2023 யில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023-2024 ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 31.10.2023-ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் உடன் துவங்கப்பட்டு விரைவில் முடிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும், மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு விளாமரத்தூர் பகுதியில் இருந்து குடிநீர் விநியோகம் செய்ய திட்டம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி பணி ரூ.2420 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.<br>இந்நிலையில் மேட்டுப்பாளையம் நகராட்சியில் தற்போது பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சியில் இளநிலைப் பொறியாளர் ஒரு பணியிடம் மட்டும் உள்ளது.<br>இதனால் வரும் திட்டப்பணிகளை உடன் மேற்கொள்ளவும், பணிகளை உடன் இருந்து கண்காணிக்கவும் நகராட்சியில் போதிய தொழில்நுட்ப பணியாளர் இல்லை. எனவே, இத்திட்டப்பணிகளை மேற்கொள்ளும் போது 4 தொழில்நுட்ப பணியாளர்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையின் மூலம் மேற்கொள்ளவும், தேவையான ஊதியம் மேற்படி திட்ட நிதி அல்லது பொது நிதியில் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 580/23/இ1<br>தீர்மான எண்: 711<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய போதிய ஆட்கள் இல்லாததால், இப்பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள 21 நபர்களுக்கு நகர்மன்ற தீர்மானம் எண் 668, நாள் 31.08.2023 மூலம் அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் 31.10.2023 அன்று முடிவடைகிறது. குடிநீர் அவசர அவசியம் கருதி ஏற்கனவே இப்பணிகளை மேற்கொண்டு வருகிற திருவாளர். M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் 01.11.2023 முதல் 28.01.2024 வரை 89 நாட்களுக்கு அதே விலை விகிதத்தில் குடிநீர் பணிகளை மேற்கொள்ளவும், இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.14.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மான எண்**: 712<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உரக்கிடங்கில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Decanting Facility அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் சேகரிக்கப்படும் கழிவுநீர், சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல கழிவுநீர் மின் பம்பு மற்றும் குழாய் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மான எண்**: 713<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 5 | நகராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் வார்டு கமிட்டி மற்றும் பகுதி சபா ஆகியவற்றிற்கு தேவையான பதிவேடுகள் விநியோகம் செய்ய தயார் நிலையில் உள்ளதாக மேலாளர், தூத்துக்குடி மாவட்ட உயர் தொழில் நுட்ப அச்சு மற்றும் சேவை தொழில் கூட்டுறவு சங்கம் கோவில்பட்டி அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வார்டு கமிட்டி மற்றும் பகுதி சபா கூட்டங்கள் நடத்தத் தேவையான பதிவேடுகளை மேற்கண்ட கூட்டுறவு சங்கத்தில் வாங்கி பயன்படுத்தவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.8,00,000/- (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3221/22/சி3<br>**தீர்மான எண்**: 714<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 6 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2023-2024ன் கீழ் இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள 86 நாட்களுக்கு தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.45.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 27.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்குஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Offline மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மற்றும் Online மூலம் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மூன்று ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி உறையினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது. எனவே, இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறையினை 04.10.2023 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் 86 நாட்களுக்கு தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் (துப்புரவு பணிகள்) மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.45.00 இலட்சம் | திருவாளர்.S.R. இன்ஜினியரிங் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.72% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.S.R. இன்ஜினியரிங் அவர்களின் பணியை ஏற்று 04.10.2023 அன்று நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்புதல் கடிதம் (Letter of Acceptance) வழங்கப்பட்டுள்ளது.

**அலுவலகக் குறிப்பு:** மேற்கண்ட பணிக்கு மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2530/22/எச்1

**தீர்மான எண்**: 715

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

7 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN40S 9846க்கு (Tata Ace) தகுதிச் சான்று பெறும் பொருட்டு பழுது பார்க்கும் பணிக்கு 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு. | ரூ. 1,13,500/- |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம். | ரூ. 1, 21, 900/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 716

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

8 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தற்பொழுது முதிர்ந்த டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் Vanfog-1, இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருகின்றது.மேலும் மேற்கண்ட இயந்திரம் வாங்கி பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு தேவைப்படும் இரண்டு Vanfog – 1, இயந்திரமும் மேலும் பைரீத்ரியம் 300லி, அபேட் 300லி, வாங்குவதற்கு 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழக்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர் சித்தார்த் அசோசியேட்ஸ், கோயமபுத்தூர். | ரூ. 5,98,800 /- |
| 2 | திருவாளர் எஸ்.எஸ். அசோசியேட்ஸ், கோயம்புத்தூர். | ரூ. 5, 99, 400 /- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்.சித்தார்த் அசோசியேட்ஸ், கோயம்புத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்**: 717

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 9 | மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதிகளில் சேகரமாகின்ற மக்கும் குப்பைகளை கொண்டு நகராட்சிக்கு சொந்தமான 2 MCC யில் உரங்கள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. உரங்கள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் பொருட்டு அதனை பேக்கிங் செய்ய தமிழக அரசு அறிவுறுத்தலின்படி "செழிப்பு" என்ற பெயரில் அச்சடித்து உரப்பைகளாக உரத்தினை விநியோகம் செய்ய வேண்டி உள்ளது. அதற்கு 2கிலோ கொள்ளவு கொண்ட பைகளில் அச்சடித்து 1000 எண்ணிக்கைகள் பைகள் வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.25000/-க்கு (இருபத்தைந்தாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மான எண்: 718<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 10 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் முக்கிய தெருக்களில் ஆடு, மாடு, கழுதை மற்றும் பன்றிகள் வளர்ப்போர் தெருக்களில் விடுகின்றார்கள். இதனால் பள்ளி செல்லுகின்ற மாணவர்கள், அவசரமாக மருத்துவமனை செல்லுகின்ற நோயாளிகள் பாதிப்பு அடைகின்றார்கள். மேலும் ஊட்டி செல்லுகின்ற முக்கிய பிரமுகர்கள் மேட்டுப்பாளையம் வழியாகத்தான் செல்ல வேண்டி உள்ளது. இதனால் போக்குவரத்து பாதிப்பு அடைந்து நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுகின்றது. இதனால் பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு, தொந்தரவாக கருதப்படுகின்றது. மேலும் இந்நகராட்சி ஆடு, மாடு, பன்றி கழுதைகள் பிடிக்க பணியாளர்கள் எவரும் இல்லை மேலும் தூய்மைப்பணிகளை மேற்கொள்ளவே பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளது. எனவே ஆடு,மாடு, கழுதை, மற்றும் பன்றிகளை அரசு வழிகாட்டுதலின்படி பிடித்து அப்புறப்படுத்த ஒப்பந்த முறையில் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மான எண்: 719<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சி நகரமைப்பு பிரிவில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் திருப்பூர், மற்றும் இந்நகராட்சிக்கு எதிராக ஆக்கிரமிப்பு கட்டிடங்கள் , நில ஆக்கிரமிப்பு போன்ற வழக்குகள், மேல்முறையீடு மற்றும் இதர வழக்குகளுக்கு இந்நகராட்சி சார்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதி மன்றம், உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்ற வழக்குகளில் ஆஜராகும் வழக்கறிஞர்களுக்கான வழக்குக் கட்டணம் வழங்க அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1891/2023/எப்1<br>தீர்மான எண்: 720<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

ஆணையாளர்

மேட்டுப்பாளையம் நகராட்சி